**வடமேல் மாகாண சபை - 2013**

வடமேல் மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வடமேல் மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 மாகாண சபையின் நிதியம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 14 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 ஏனைய கணக்குகள்**

**(அ) வருமானக் கணக்குகள்**

மாகாண நிதி விதிகளின் பிரகாரம் வருமானம் தொடர்பாக நியதிச்சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் தமக்குரிய வருமானக் கணக்குகளை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான மாகாண சபை வருமானக் குறியீடுகளுக்குரிய கணக்குகள் 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டு தொடர்பாக 2014 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்கின் பெயர் | 2013 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 26 | - | - |
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 73 | 60 | 13 | 74 |
| (iii) | மாகாண சபை உறுப்பினர்களுக்கான கடன் வசதிகள் முற்பணக் கணக்கு | 01 | 01 | - | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 07 | 04 | 03 | - |
| (v) | நிதிய மற்றும் நியதிச்சட்டக் கணக்குகள் | 14 | 13 | 01 | 14 |
| | மொத்தம் | 121 | 104 | 17 | 88 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வடமேல் மாகாண சபைக்குரிய 07 திணைக்களங்களில் ரூபா 10,462,434 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிராததுடன் 10 திணைக்களங்களுக்குரிய ரூபா 32,498,919 தொகையான பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுகாதார சேவைகள் திணைக்களம், சிறு கைத்தொழில் திணைக்களம் மற்றும் பொறியியல் திணைக்களம் என்பவற்றின் பொது வைப்புக் கணக்குகளுக்குரிய திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் திணைக்கள ஏடுகளுக்கிடையே ரூபா 17,741,506 தொகையான வேறுபாடும், சுகாதார, சுதேச வைத்திய, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் தொடர்பான மாகாண அமைச்சு, சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் பொறியியல் திணைக்களம் போன்ற நிறுவனங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்குகளில் திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் திணைக்கள ஏடுகளுக்கிடையே ரூபா 52,290,518 தொகையான வேறுபாடும் காணப்பட்டன.

(ஆ) சமூக நலன்புரி அமைச்சு மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழு என்பவற்றில் மீளாய்வாண்டிற்குரியதாகத் தயாரிக்கப்பட்ட முற்பண ''பீ'' கணக்குகளில் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பு மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுக்கிடையே ரூபா 762,026

கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) மாகாண கல்வித் திணைக்களத்தின் 05 வலய அலுவலகங்களில் சீசீ 10 பதிவேட்டிற்கும் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட கடன் மீதிப் பட்டியல்களுக்குமிடையே ரூபா 5,609,259 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) மாகாண கல்வித் திணைக்களத்தின் முற்பண ''பீ'' கணக்குகளில் 04 வலய அலுவலகங்களில் திணைக்களப் புத்தகங்களின் பிரகாரமான மீதிகளுக்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 1,763,014 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

குளியாப்பிட்டி கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை நிதிய மீதிகளின் காலப்பகுப்பாய்வைவொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 67 கூட்டுறவுச் சங்கங்களால் தயாரிக்கப்பட்ட நிதிய மீதி பகுப்பாய்வு மற்றும் பேரேட்டுப் பதிவுகளுக்கிடையே 47 சந்தர்ப்பங்களின் போது ரூபா ரூபா 4,490,619 கூட்டுத்தொகையான அதிகரிப்பொன்றும் 20 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,817,278 கூட்டுத்தொகையான குறைவொன்றும் அவதானிக்கப்பட்டன.

### 2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

ஒரு வருடத்தைவிட மேற்பட்ட காலம் முதல் 02 பிரதேச செயலகங்களிலிருந்தும் மாகாண சபையின் 03 திணைக்களங்களிலிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானமாக ரூபா 1,003,972,178 தொகை மாகாண சபைக்கு கிடைக்கவேண்டியிருந்தது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்குகள்**

மாகாண சபையின் ஒரு அமைச்சு, 04 திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகமொன்றினால் மீளாய்வாண்டின் இறுதியில் மாகாணத் திறைசேரிக்கு தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,578,198 ஆக இருந்தது. அந்த மீதிகளில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 819,533 தொகையான மீதிகளும் உள்ளடங்கியிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

மீளாய்வாண்டின் இறுதியில் 03 மாகாண அமைச்சுக்கள், 07 திணைக்களங்கள், 05 பிரதேச செயலகங்கள் மற்றும் தலைமைச் செயலகம் என்பவற்றில் 02 வருடங்களை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 12,581,983 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அறவிட வேண்டிய ஊழியர் கடன்**

04 மாகாண அமைச்சுக்கள், 08 திணைக்களங்கள் மற்றும் 12 பிரதேச செயலகங்கள் என்பவற்றில் இடமாற்றலாகிச் சென்ற, மரணித்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற, வேலைநீக்கம் செய்யப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் தீர்க்கப்படாத 03 வருடங்களை விஞ்சிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,775,721 ஆக இருந்தது.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் பெரியமடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 25 ஏக்கர்களுக்குரிய நீண்ட கால குத்தகைக் கோவை காணாமல்போனமையால் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது புத்தளம் பிரதேச செயலகத்தில் 539 காணி வருமானக் கோவைகளுக்கு வருடாந்த வாடகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அதிகாரச்சட்டம் | |
| (i) 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க அதிகாரச்சட்டத்தின் 43(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் கூட்டுறவுச் சங்க விதி 43(11) | குளியாப்பிட்டி மற்றும் சிலாபம் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குரிய 1110 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து செலவு வைக்கப்பட வேண்டிய பங்களிப்புப் பணத்தின் ரூபா 48,205,766 கூட்டுத்தொகை 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கூட்டுறவு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் வைத்திய நிறுவன | தனியார் வைத்திய நிறுவனத்தை பதிவுசெய்யும் போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் |

| | | |
|---|---|---|
| | (பதிவுசெய்தல்) அதிகாரச்சட்டத்தின் 3.5 ஆம் பிரிவு | சேகரிக்கப்டுகின்ற கட்டணங்களில் 50 சதவீதம் மாகாண சபைக்குச் செலுத்தவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் விசேட கணக்கில் ரூபா 3,082,660 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. |

(ஆ) வடமேல் மாகாண நிதி விதிக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | மா.நி.வி. 97.4 மற்றும் 116.2 | புத்தளம் மாவட்டத்தின் 18 பிரதேச செயலகங்களில் மாகாண சபை நிலுவை வருமானம் தொடர்பாக அரையாண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | மா.நி.வி. 117.1 மற்றும் 118 | மாகாண நிதி விதி ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மாதம்பை பிரதேச செயலகத்தில் 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் செலவினங்களைச் செய்ததன் பின்னர் ரூபா 1.2 மில்லியன் முதல் 9.1 மில்லியன் வரையான வீச்சில் எஞ்சிய பணம் சில மாதங்களாகவும், சிலாபம் பிரதேச செயலகத்தில் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட மாகாண சபை வருமானம் மற்றும் கட்டணம் ரூபா 253,899 தொகையும் மாகாண திறைசேரிக்கு அனுப்பப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (iii) | மா.நி.வி.476 | மாகாண சகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்திலும் உயிரியல் வைத்திய பொறியியல் பிரிவிலும் 2012, 2013 ஆம் ஆண்டுகளிலும், புத்தளம் மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், 02 கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் 07 மத்திய மருந்தகங்கள் என்பவற்றில் 2010 ஆம் ஆண்டிலிருந்தும், இன்னுமொரு தள வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலையொன்று, 03 கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் 14 மத்திய மருந்தகங்கள் மற்றும் 06 சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் என்பவற்றில் 2011 ஆம் ஆண்டிலிருந்தும் பொருள் மெய்மையாய்வு |

நடாத்தப்பட்டிருக்கவில்லை. தொகுதிப் பிரிவு , 02 கிராமிய வைத்தியசாலைகள், 10 மத்திய மருந்தகங்கள், ஒரு சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் புத்தளம் மலேரியா பிரிவிலும் இருதய நோய் மருந்தகத்திலும் பொருள் மெய்மையாய்வு இதுவரை மேற்கொள்ளப்ட்டிருக்கவில்லை.

1180 மாகாணப் பாடசாலைகளில் 804 பாடசாலைகள் 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்டடிருந்ததுடன் அதில் 244 பாடசாலைகளின் அறிக்கை கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்க வில்லை.

1183 மாகாணப் பாடசாலைகளில் 849 பாடசாலைகளிலும், 35 தேசிய பாடசாலைகளிலும், 08 வலய அலுவலகங்களிலும் 2013 இன் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 285 மாகாணப் பாடசாலைகளினதும், 24 தேசிய பாடசாலைகளினதும், 03 வலய அலுவலகங்களினதும் அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(இ) சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| (i) | 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க மற்றும் 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிருவாக, உள்நாட்லுவல்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளர் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 188,264 கூட்டுத்தொகையான எரிபொருள் படி மேலதிகமாகப் பெற்றிருந்தார். |
| (ii) | வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2011 அகஸ்ட் 06 ஆந் திகதிய சுற்றறிக்கை/4/2/1/பஆவே – 2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் படி மாகாண முதலீட்டு நிதிஏற்பாடுகளிலிருந்து 20 சதவீதம் சுயதொழில் பிரிவிற்கு ஒதுக்கப்பட வேண்டிய போதிலும், அந்த நியமங்களுக்கு இணங்காத வகையில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 161,830 தொகையாக 6 சதவீதமும், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 363,239 தொகையாக 12 சதவீதமும் ஒதுக்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (iii) | திறைசேரி பிரதிச் செயலாளரின் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் படி அரசாங்க நிதி தொடர்பாக உரித்தாகின்ற யாப்பு வரையறைக்குள் அமுல்படுத்தக்கூடிய வகையில் நிதிஏற்பாடு வழங்கப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் 4.4 அம் பந்தியின் படி கூட்டுறவு நிதியத்தின் கணக்கு கணக்காய்வு மற்றும் அறிக்கையிடலுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.9 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வளவில் அமைந்துள்ள உடற்பயிற்சிப் பிரிவிற்கு ரூபா 599,740 பெறுமதியான பொருட்கள், 10 வகையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த பொருட்கள் முறையாக கையேற்கப்பட்டு பொருட்பதிவேட்டில் இடப்பட்டிருக்கவில்லை. இதன் நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் பயிற்சியாளர்களின் விருப்பத்தின் படி மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 3. வருமான முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மாகாண சபையின் ஒவ்வொரு வருமானக் குறியீட்டின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானங்களுடன் ஒப்பீடு செய்து கீழே தரப்படுகின்றன.

| வருமானக் குறியீட்டு இலக்கம் | வருமான விபரம் | 2013 மதிப்பீட்டு வருமானம் | 2013 உள்ளபடி யான வருமானம் | 2012 மதிப்பீட்டு வருமானம் | 2012 உள்ளபடி யான வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10.02, 10.03 | உற்பத்தி மற்றும் செலவின அடிப்படையிலான வரி | 4,941.00 | 4,007.15 | 3,242.24 | 3,409.57 |
| 20.02 | வாடகை, வட்டி, இலாபம் மற்றும் இலாபப் பங்கு | 203.00 | 233.29 | 197.90 | 187.55 |
| 20.03 | விற்பனையும் கட்டணங்களும் | 447.00 | 461.11 | 1,525.26 | 1,284.04 |
| 20.06 | மூலதனப் பொருட்களின் விற்பனை | 2.00 | 0.24 | 2.60 | 0.53 |
| | மொத்தம் | 5,593.00 | 4,701.79 | 4,968.00 | 4,881.69 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வரி வருமானத்தில் ரூபா 933,853,524 தொகை அதாவது 19 சதவீதத்தை சேகரிக்க முடியாதிருந்தது. அவ்வாறே வரியல்லா வருமானம் ரூபா 42,642,422 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) 06 பிரதேச செயலகங்களிலிருந்து மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் அறவிடவேண்டிய நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 11,123,585 ஆகக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் 25 உள்ளூராட்சி அதிகார சபைகளில் கிடைத்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 30,895,298 தொகை மற்றும் 03 உள்ளூராட்சி அதிகார சபைகளில் கிடைத்த முத்திரைக் கட்டணம் ரூபா 60,974,947 தொகை உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 275,981,295 தொகை மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 600,164,364 ஆக இருந்தது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

வருமானங்கள் மற்றும் செலவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் பற்றிய பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | 2013 | | | 2012 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதீடு செய்யப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| வருமானங்கள் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரி வருமானம் | 4,941.00 | 4,007.15 | 933.85 | 4,322.24 | 4,205.87 | (116.37) |
| வரி அல்லாத வருமானம் | 652.00 | 694.64 | (42.64) | 645.76 | 675.83 | (30.07) |
| அரசாங்க மானியம் | 17,568.44 | 16,332.24 | 1,236.20 | 15,519.60 | 13,159.49 | 2,360.11 |
| மொத்தம் | 23,161.44 | 21,034.03 | 2,127.41 | 20,487.60 | 18,041.19 | 2,446.41 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | | | | | | |
| ஆளணி வேதனம் | 16,050.31 | 15,369.85 | 680.63 | 13,380.49 | 13,860.99 | (480.50) |
| ஏனைய செலவினம் | 4,650.90 | 3,800.17 | 850.73 | 4,992.30 | 3,452.59 | 1,539.71 |
| உப மொத்தம் | 20,701.21 | 19,169.85 | 1,531.36 | 18,372.79 | 17,313.58 | 1,059.21 |
| மூலதனச் செலவுகள் | 2,460.23 | 1,588.20 | 872.03 | 2,114.81 | 1,327.77 | 787.04 |
| மொத்தம் | 23,161.44 | 20,758.05 | 2,403.39 | 20,487.60 | 18,641.35 | 1,846.25 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மொத்தச் செலவினத்தில் 92.35 சதவீதம் மீண்டெழும் செலவினமும், 7.65 சதவீதம் மூலதனச் செலவினமுமாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் மொத்த வருமானத்தில் வரி வருமானம் 19.05 சதவீதமும், வரியல்லா வருமானம் 3.3 சதவீதமும், அரசாங்க மானியம் 77.65 சதவீதமும் ஆக இருந்தன.

(இ) சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் போது ரூபா 748,452,671 தொகை மற்றும் அதற்கு முன்னைய ஆண்டின் போது ரூபா 1,152,378,365 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேதிகமாக மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் 03 நிதியங்கள் மற்றும் 07 அதிகாரசபைகளில் காணப்பட்ட நிதியங்களிலிருந்து ரூபா 362,714,680 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண சபை அமைச்சொன்று மற்றும் 09 திணைக்களங்களில் 26 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 114,151,640 தொகையான முழுமையான நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. 20 தலைப்புக்களுக்குரிய 262 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2,377,708,356 தொகையான நிதி ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

## 5. அதிகாரசபைக் கணக்கு / நிதியக் கணக்கு மற்றும் வணிக முற்பணக் கணக்கு

### 5.1 அதிகாரசபைக் கணக்கு / நிதியக் கணக்கு

#### 5.1.1 வடமேல் இயந்திர உபகரண அதிகாரசபை

**(அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

(i) நிறுவனத்தின் தொடர்ந்திருத்தல்

2010 ஆம் ஆண்டு முதல் 2013 வரை நிறுவனம் நட்டத்தைப் பெறுவதால் அதன் தேறிய சொத்துக்களுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுகின்றமையால் உரிமைத் தன்மை நீங்கிச் செல்கின்றமை

அவதானிக்கப்பட்டதுடன் மாகாண சபையின் / அரசாங்கத்தின் அல்லது ஏனைய நிதியுதவியின்றி அதிகாரசபையை நடாத்திச் செல்லுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

(ii) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், அது மூலதனக் கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் மூலதனக் கணக்கு ரூபா 81,425,060 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) சேவைக்காலம் 05 வருடங்களை விஞ்சிய 86 ஊழியர்களுக்கு ரூபா 17,827,630 தொகை பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 592,032 தொகையாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டமையால் ரூபா 17,235,598 தொகை குறைவாக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

a) பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பழுதுபார்த்தல் கட்டணமாக ரூபா 52,833,070 தொகை அறவிட வேண்டியிருந்தது. அதில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 28,231,328 ஆக இருந்தது.

b) செலுத்த வேண்டிய கணக்குகள்

பல வருடங்களுக்கு முன் பிரதம அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,824,169 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 4,304,499 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 10,433,627 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,129,128 தொகையான குறைவைக் காணக்கூடியதாக இருந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

(i) செயலாற்றல்

வாகனங்களை வாடகைக்கு வழங்கல் நிறுவனத்தின் பிரதான வருமான வழியாக இருந்ததுடன் அவை செயலிழந்ததும் உடனடியாக பழுதுபார்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. MG 07 ஆம் இலக்க வாகனம் 2013 ஒக்தோபர் ஆரம்பத்தில் செயற்பாடற்றிருந்த போதிலும் அதனை துரிதமாக பழுதுபார்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் நிறுவனத்தால் இழக்கப்பட்ட வருமானம் அண்ணளவாக ரூபா 1,355,640 ஆகும்.

(ii) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

a) வேலை நீக்கத்திற்குள்ளாகிய முகாமைப் பணிப்பாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 628,700 தொகையான ஊழியர் கடன் மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

b) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 வரையான காலத்தில் செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 5,505,492 தொகை மற்றும் 2012/2013 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்தவேண்டிய பெறுமதிசேர் வரி ரூபா 6,168,353 தொகை என்பன உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

c) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் செலுத்த வேண்டிய ரூபா 10,153,833 தொகையான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்த வேண்டிய மிகைக் கட்டணம் உரிய நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 2,353,291 பெறுமதியான 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய இருப்பு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**(உ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

உரிய திகதியில் செலுத்தப்படாததன் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,384,808 தொகை மிகைக்கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5.1.2 மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை

### (அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### கணக்கீட்டுக் குறைபாடுகள்

எலவக்க புல் செயற்திட்டக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 98,970 தொகை மூலதனமாக்கப்பட்டிராததுடன், கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலத்தின் உரித்தை அதிகாரசபைக்கு கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) நிதி மீளாய்வு

#### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் மாகாண சபை மானியத்தைக் கணிப்பிடுவதற்கு முன் பற்றாக்குறை ரூபா 5,939,372 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,938,790 ஆனமையால் பற்றாக்குறையில் ரூபா 2,000,582 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முறையே மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 5,850,000 மற்றும் ரூபா 5,500,000 தொகையான மானியங்களின் காரணமாக முறையே ரூபா 89,372 தொகையான பற்றாக்குறையையும், ரூபா 1,561,210 தொகையான மிகையையும் காண்பித்ததுடன், அதன்படி முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,650,582 தொகையான குறைவைக் காண முடிந்தது.

### (இ) செயற்பாட்டு மீளாய்வு

(i) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) மாகாண சபை நிதியத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்

மாகாண சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 9,092,578 கடன்தொகையில் மூன்று நபர்களிடமிருந்தும் 20 சங்கங்களிலிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 1,845,303 தொகையான கடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடவேண்டியிருந்தது.

b) செயற்திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன்கள்

செயற்திட்ட கடனின் கீழ் நிறுவனங்களுக்கும் 194 நபர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 33,421,500 தொகையான கடன் தொகையிலிருந்து ரூபா 16,175,006

தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனுள் அதிகாரசபையால் 2006-2013 காலப்பகுதியில் 11 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 975,000 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஈ) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

வருடாந்தம் 5 சதவீத வட்டி வீதத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,239,300 தொகையான ஆதனக்கடன் நோக்கத்திற்கு முரணாக பிரதம அமைச்சுச் செயலாளர் அல்லது ஆளுனரின் அங்கீகாரமின்றி சுழற்சி நிதியத்தின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்தது.

## 5.1.3 பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை

**(அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 322 பஸ் வண்டிகளிலிருந்து அறவிட வேண்டிய மாதாந்த ஓட்டக்குறிப்பு மற்றும் நுளைவுக் கட்டணமான ரூபா 1,224,000 தொகை கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அதே அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 105,616 பெறுமதியான இருப்புக்கள் முழுவதும் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ii) கிடைக்கவேண்டிய கணக்குகள்

02 வருடங்களும் 13 வருடங்களும் இடையிலான காலப்பகுதி முதல் முன்கொண்டுவரப்படுகின்ற கிடைக்கவேண்டிய ரூபா 860,501 தொகையான மீதியை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| a) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.2(அ) பிரிவு, | கொள்வனவுகளுக்கும் பழுதுபார்த்தல்களுக்குமாக சந்தை விலை ஒப்பிடல் முறைமை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், பொருட்களின் விபரம், அளவு, கேள்வி கையளிக்கப்பட்ட நேரம், இடம், பொறுப்புக்கள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் பேணப்படாது 11 சந்தர்ப்பங்களின் போது வாகன பழுதுபார்த்தல்களுக்கு ரூபா 507,497 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| b) 2004 சனவரி 16 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் 2:1 ஆம் பந்தி | வடமேல் மாகாணத்தில் உள்ளபடியாக பஸ் சேவைகள் தேவையான வீதிகளைத் தீர்மானித்தல், திறந்த கேள்வி நடைமுறைகளின் மூலம் அனுமதிப்பத்திரத்தாரர்களைத் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அந்த நடைமுறைகளுக்கு முரணாக 83 வீதி அனுமதிப்பத்திரங்களுக்காக ரூபா 1,731,000 தொகையான ஆகக்குறைந்த தொகை அறவிடப்பட்டு அனுமதிப்பத்திர வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## (ஆ) நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் மாகாணசபை மானியங்களைக் கணிப்பீடு செய்வதற்கு முன் ரூபா 10,566,847 தொகை பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,004,524 ஆனமையால் பற்றாக்குறையில் ரூபா 2,562,323 தொகையான அதிகரிப்பைக் காண முடிந்தது. மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முறையே மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 14,700,000 தொகை மற்றும் ரூபா 21,835,290 தொகையான மானியங்களைச் சீராக்கியதன் பின்னர் பற்றாக்குறையில் முறையே ரூபா 4,133,153 மற்றும் ரூபா 13,830,766 தொகையான மிகை ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,697,613 தொகையான குறைவைக் காணமுடிந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

(i) செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

a) 09 நடமாடும் வீதிப் பரிசோதனை உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 267,369 தொகை அறவிடவேண்டியிருந்தது.

b) அதிகாரசபைக்காக கணக்கு மற்றும் முகாமைத்துவ மென்பொருளை வடிவமைப்பதற்கு 2009 திசெம்பர் மாதத்தில் தனியார் நிறுவனத்திற்கு ரூபா 100,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அச்செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்படாமையால் முற்பணம் செயற்பாடற்ற செலவினமாகியிருந்தது.

(ii) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) அதிகாரசபையின் நோக்கங்களுக்கு இணங்காது 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 161,874 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

b) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2.2(5) ஆம் பிரிவு, 1999 சனவரி 09 ஆந் திகதிய 81 ஆம் இலக்கம் மற்றும் 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி ஊழியர் பணிக்கொடை நிலையான வைப்பு பிணையாக வைக்கப்பட்டு ரூபா 8,850,000 கடன் தொகை பெறப்பட்டு நபரொருவரின் பெயரில் முதலாவது பதிவுசெய்யப்பட்ட வாகனமொன்று ரூபா 8,400,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**5.14 பிரதம அமைச்சர் நிதியம்**

**நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்காக பிரதம அமைச்சர் நிதியத்தில் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 313,104 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 269,000 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 582,104 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

**5.1.5 மாகாண சுற்றாடல் அதிகாரசபை**

**(அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 4,203,443 பெறுமதியான 04 சொத்து வகைகள் பெறுமானத் தேய்விடப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும் அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றமையால் மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் காண்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

முறையான நிலையான சொத்துப்பதிவேடொன்று பேணப்படாமையால் ரூபா 5,297,141 கூட்டுத்தொகையான அலுவலக, விஞ்ஞான மற்றும் கணனி உபகரணங்கள் தொடர்பாக விரிவான பரிசோதனையொன்றை மேற்கொள்ளமுடியாதிருந்தது.

(iii) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் உத்தியோத்தரொருவருக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய இடர் கடன் ரூபா 250,000 தொகைக்கு வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்காத வகையில் 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 914,660 தொகை அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் மாகாணசபை மானியங்களைக் கணிப்பீடு செய்வதற்கு முன் ரூபா 864,484 தொகை பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,641,976 ஆனமையால் நிதி விளைவில் ரூபா 3,506,460 தொகையான குறைவைக் காண முடிந்ததுடன் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முறையே மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 5,350,000 தொகை மற்றும் ரூபா 5,356,230 தொகையான மானியங்களைக் கணிப்பீடு செய்ததன் பின்னர் மேற்கூறப்பட்ட பெறுமதியில் ரூபா 4,485,516 மற்றும் ரூபா 7,998,206 தொகையான மிகையாக ஏற்பட்டிருந்தது. அதன் படி முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,512,690 தொகையான

குறைவைக் காணமுடிந்தது.

**5.1.6 வடமேல் அபிவிருத்தி அதிகாரசபை**

**(அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

a) ஐந்தொகையில் கட்டிடம் மற்றும் நிர்மாணத்தின் கீழ் கணக்கு வைக்கவேண்டிய ரூபா 532,083 பெறுமதியான 04 சொத்துக்கள் கடற்றொழில் உபகரணக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

b) ஏடுகளின் பெறுமதி பூச்சியமான ரூபா 8,640,520 கிரயமான 141 நிலையான சொத்து விடயங்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

a) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உத்தியோகத்தர்களிடமிருந்தும் வெளித் தரப்பினர்களிடமிருந்தும் கிடைக்கவேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 5,723,261 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,072,038 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 621,242 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவிட வேண்டியிருந்தது.

b) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,022,526 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,839,964 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், ரூபா 28,423 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் செலுத்த வேண்டியிருந்தது.

(ii) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பெறவேண்டிய வருமானம் ரூபா 5,532,925 தொகைக்கான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமா்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பா் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் மாகாணசபை மானியங்களைக் கணிப்பீடு செய்வதற்கு முன் ரூபா 8,506,577 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,971,778 பற்றாக்குறையில் ரூபா 1,534,799 தொகையான அதிகரிப்பைக் காண முடிந்ததுடன் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முறையே மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 7,252,000 தொகை மற்றும் ரூபா 7,416,430 தொகையான மானியங்களின் காரணமாக ரூபா 1,254,577 பற்றாக்குறையும் ரூபா 444,652 தொகையான மிகையும் ஏற்பட்டிருந்தது. அதன் படி முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,699,229 தொகையான குறைவைக் காணமுடிந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

இப்பாகமுவ தலகஸ்வெவ சுற்றுலா நிலையமொன்றை அமைப்பதற்கு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,169,640 தொகை செலவிடப்பட்டு 10 படகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் வெற்றியடையாமையால் அந்தப் படகுகள் குருனாகலை நகர சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை எப்பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

மேலும் 2009 திசெம்பா் மாதத்தின் போது தளபாட வடிவமைப்பு பயிலுனா் செலவினம் ரூபா 238,925 தொகை இந்த நிலையத்திற்காகச் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதுவும் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## 5.1.7 கைத்தொழில் சேவைப் பணியகம்

**(அ) நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பணிக்கொடைக் கணிப்பீடு 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்திற்கு இணங்காத வகையில் மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 264,219 தொகை மிகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

05 பேரேட்டுக் கணக்குகளின் இறுதி மீதிகளுக்கும் கணக்கின் பிரகாரமான இறுதி மீதிகளுக்குமிடையே ரூபா 1,095,134 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(iii) கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,645,210 கூட்டுத்தொகையான கிடைக்கவேண்டிய மீதிகளும் ரூபா 4,075,682 கூட்டுத்தொகையான செலுத்தவேண்டிய மீதிகளும் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 65,173,261 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 17,375,804 தொகையான அவற்றின் பெறுமானத் தேய்வு தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடும், ரூபா 17,688,400 தொகையான நிலையான வைப்புக்களின் விரிவான பட்டோலையும், ரூபா 2,560,000 தொகையான முதலீட்டின் விபரமும் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(v) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

மாகாண நிதி விதி 420.3 இன் பிரகாரம் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,129,477 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 25,653,389 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 14,370,604 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 11,282,785 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**(i) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

2012 ஆம் ஆண்டின் போது 02 எக் இன்கியுபேட்டர் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,480,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த இரண்டு இயந்திரங்களும் இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. மாகாண நிதி விதி 164(ஆ) இன் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மேற்கொள்ளப்பட்ட இக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக இறுதிக் கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே இந்த இரண்டு இயந்திரங்களும் கிடைக்காமையினால் பாதெனிய மற்றும் குளியாப்பிட்டியில் அமைந்துள்ள 02 கோழிக் குஞ்சு இனவிருத்தி செய்யும் இடங்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

**(ii) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2.2(5) ஆம் பிரிவு, 1990 சனவரி 09 ஆம் திகதிய 81 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் திறைசேரியின் முன்அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி 2008 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனமொன்று ரூபா 4,000,000 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக கொள்வனவு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பகிரங்க கூறுவிலை கோரப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் இதற்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட வில்லை.

b) தேவையான மாதிரிகள் தயாரித்தல் மற்றும் கொள்வனவு நடைமுறைகளின்றி 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 545,000 பெறுமதியான உபயோகிக்கப்பட்ட ஸ்டீம் பொய்லர் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 386,280 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 5.1.8 வடமேல் ஜனகலா மன்றம்

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) மீளாய்வாண்டின் போது பொதுப் பேரேட்டின் ஆரம்ப மீதிகளையும் முன்னைய ஆண்டின் உரிய கணக்குகளின் இறுதி மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 2,212,490 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

b) 05 வருடங்களுக்குரிய காசேட்டின் பகுப்பாய்வு நிரலின் கூட்டுத்தொகைக்கும் அதற்குரிய பேரேட்டுப் பதிவுகளுக்குமிடையே ரூபா 1,055,701 தொகையான

வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

c) வருடாந்த வருமானம் மற்றும் அலுவலக வருமானமாகக் கிடைத்த ரூபா 694,534 தொகை வருமானக் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது.

d) பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்ட 06 நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 746,052 பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இனங்காண முடியாதிருந்தது.

**(ii) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| a) | 10 பேரேட்டுக் கணக்குகளின் கூட்டுத்தொகை | 1,601,778 | பொதுப் பேரேட்டில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கு |
| b) | கடன்கொடுத்தோர் | 966,878 | விரிவான கடன்கொடுத்தோர் பதிவேடு |
| c) | ஏலவிற்பனை வருமானம் | 106,580 | விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் விபரமும் பற்றுச்சீட்டும் |
| d) | குருணாகலை விஸ்கம் விடுதி கொள்வனவுகள் | 702,362 | 2013 இன் வரைவு இறுதிக் கணக்கிற்கும் திருத்தப்பட்ட கணக்கிற்குமிடையேயான வேறுபாடுகளுக்கான காரணங்கள் |
| e) | சிலாபம் விஸ்கம் விடுதி கொள்வனவுகள் | 360,334 | |
| f) | 50 டீ கொள்வனவுகள் | 415,984 | |

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் மாகாண சபை மானியத்தைக் கணிப்பீடு செய்வதற்கு முன்னர் மிகை ரூபா 8,017,584 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 662,975 ஆனமையால் நிதி விளைவுகளில்

ரூபா 8,680,559 தொகையான அதிகரிப்புக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முறையே மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 900,000 தொகை மற்றும் ரூபா 1,500,000 தொகையான மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 8,917,584 வரை அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 837,025 தொகையான மிகையாக மாறியிருந்தது. முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,080,559 தொகையான அதிகரிப்பைக் காணமுடிந்தது.

## 5.1.9 முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை

### (அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### (ஆ) நிதி மீளாய்வு

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் மாகாண சபை மானியத்தைக் கணிப்பீடு செய்வதற்கு முன்னர் பற்றாக்குறை ரூபா 3,167,174 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,445,246 ஆனமையால் பற்றாக்குறையில் ரூபா 278,072 குறைவைக் காணமுடிந்ததுடன் மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் முறையே மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 5,650,000 தொகை மற்றும் ரூபா 5,800,000 தொகையான மானியத்தின் காரணமாக பற்றாக்குறை முறையே ரூபா 2,482,826 தொகை மற்றும் ரூபா 2,354,754 தொகையான மிகையாக மாறியிருந்தது. அதன் படி முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளை ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 128,072 தொகையான அதிகரிப்பைக் காணமுடிந்தது.

## 5.1.10 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய உத்தேசத் திட்டம்

### (அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### (i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) மீளாய்வாண்டின் கூட்டுறவு நிதியத்திலிருந்து கிடைத்த ரூபா 5,000,000 தொகை மற்றும் வடமேல் கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கத்திலிருந்து கிடைத்த ரூபா 2,000,000 தொகையுமாக ரூபா 7,000,000 கூட்டுத்தொகை மூலதனமாக்கப்படாமல் ஆண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

b) நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படாமையால் நிதியத்தின் நிதி விளைவுகளிலும்

நிதி நிலைமைக்கும் பின்வரும் தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன.

- மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.
- 32 கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்குரித்தான 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த அங்கத்தவர் கட்டணம் மற்றும் பங்களிப்புப் பணமான ரூபா 2,612,485 தொகை 2013 ஆம் ஆண்டின் போது கிடைக்கவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.
- கேட்டு விலகிய 12 அங்கத்தவர்களுக்கு மீளச் செலுத்தவேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 285,549 தொகை நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய உத்தேசத் திட்டத்தில் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 39,105,662 ஆக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 18,777,479 ஆக இருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 20,328,183 இனால் அதிகரித்திருந்தது.

**(இ) கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 செலவின விடயங்களுக்காக ரூபா 1,400,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 463,244 ஆனமையால் ரூபா 936,756 தொகையான மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) செலவினங்களுக்காக ரூபா 1,454,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் எச்செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.1.11 விளையாட்டு நிதியம்**

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டின் போது கிடைத்த வருமானம் ரூபா 92,950 தொகை கிடைக்கவேண்டிய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ii) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| வடமேல் மாகாண நிதி விதிக்கோவை | |
| * மா.நி.வி 475 | கைப்பணிக் கலை சாலிக்கா நிலையத்தின் முன்னாள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரால் நிறுவனத்தின் அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் முறையாகக் கையளிக்கப்பட்டிருக்வில்லை. |
| * மா.நி.வி 476 | 2009, 2010, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விளையாட்டு நிதியத்தின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 18,223,535 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 15,373,470 ஆனமையால் பற்றாக்குறை ரூபா 2,850,065 இனால் அதிகரித்திருந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**(i) செயலாற்றல்**

குளியாப்பிட்டி சனாதிபதி கைப்பணிக் கலை சாலிக்கா நிலையத்தின் விளையாட்டரங்கு, பெட்மின்டன் விளையாட்டரங்கு, பிரதான கூட்ட மண்டபம் மற்றும் நீச்சல் தடாகம் என்பன உரிய பிரகாரம் திருத்தப்படாமையால் செயற்திறனாக அதில் செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருந்தது.

**(ii) நிதியத்தின் குறைவான பயன்பாடு**

2006 ஆம் ஆண்டின் போது மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் விளையாட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு கிடைத்த ரூபா 1,100,000 தொகை நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**(iii) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்பாடுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) ரூபா 249,165 கிரயமான சங்கீத உபகரணங்கள் மற்றும் 04 மோர்கரி மின்குமிழ்கள் 08 வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

b) அலுவலகத்தின் கணனியொன்று 02 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

c) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 388,120 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணறு நீர் இன்றியமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது.

**5.1.12 சிறு நீர்ப்பாசன மற்றும் கிராமிய வீதி பராமரிப்பு நிதியம்**

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய கிடைக்கவேண்டிய வட்டி ரூபா 465,662 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 639,698 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் மிகை ரூபா 2,675,869 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய

ஆண்டின் மிகை ரூபா 2,950,911 ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவில் ரூபா 275,042 தொகையான தேறிய வீழ்ச்சியினைக் காண்பித்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**(i) செயலாற்றல்**

a) 2004 இன் 03 ஆம் இலக்க சிறு நீர்ப்பாசன மற்றும் கிராமிய வீதி பராமரிப்பு நிதியத்தின் நியதிச்சட்டங்களின் படி வடமேல் மாகாணத்தில் பேணப்படுகின்ற சிறு நீர்ப்பாசன மற்றும் கிராமிய வீதிகளை ஒழுங்கு முறையாகவும் பொருத்தமான சந்தர்ப்பங்களிலும் பராமரிப்பதற்காக தேவையான நிதியினைச் சேகரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் சிறு நீர்ப்பாசன மற்றும் கிராமிய வீதி பராமரிப்பு நிதியத்தின் பணியாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் கிராம வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

b) தெரிவுசெய்யப்பட்ட 684 சிறு நீர்ப்பாசன செயற்திட்டங்களில் மீளாய்வாண்டின் போது 170 செயற்திட்டங்களுக்காக மாத்திரம் ரூபா 1,231,420 தொகையும் முன்னைய ஆண்டில் 51 செயற்திட்டங்களுக்காக மாத்திரம் ரூபா 715,402 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

c) மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 129,809 தொகையும், முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 3,777,479 தொகையும் உழைக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் மொத்த வருமானத்தில் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தும் பங்களிப்பு முறையே 3 சதவீதம் மற்றும் 97 சதவீதமாக இருந்தன.

d) நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,231,420 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் மாத்திரம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 4,750,000 ஆகும்.

e) அரசாங்க சேவையை நடாத்திச் செல்வதற்காக அரசாங்கத்தால் உயர் கடன் சேவை தொழிற்படு கிரயத்தைச் செலவிட்டு கடன் பெறும் நிலையில் அரசாங்கத்தின் பணம் குறைந்த வட்டியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 5.1.13 வடமேல் பிரதேச வள அபிவிருத்தி அதிகாரசபை

### (அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### (i) நிறுவனம் தொடர்ந்து இயங்குதல்

கடந்த 04 வருடங்கள் முதல் அதிகாரசபை தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது திரண்ட நட்டம் ரூபா 2,065,370 ஆக இருந்ததுடன் ஆண்டின் தேறிய நட்டம் ரூபா 1,059,262 ஆக இருந்தது.

#### (ii) தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வடமேல் மாகாண கடற்றொழில் அமைச்சால் கட்டளையிடப்பட்ட ரூபா 1,165,000 பெறுமதியான "பைபர்கிளாஸ்" உற்பத்தி செய்யப்படாது விற்பனையாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### (iii) கணக்கீட்டுக் கொள்கை

மூன்று செயற்திட்டங்களுக்குரிய ரூபா 18,284,476 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (iv) கணக்கீட்டுக் குறைபாடு

திறசார நீர்வாழ் வளர்ப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,071,302 பெறுமதியான சென்றி பியூஜ் இயந்திரம் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### (v) கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

ரூபா 4,246,023 பெறுமதியான கடன்பட்டோர் மற்றும் ரூபா 4,260,357 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

#### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,059,262 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,155,267 ஆனமையால் நிதி விளைவில் ரூபா 96,005 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**(i) முகாமைத்துவ செயற்திறனின்மை**

அதிகாரசபையின் நில அளவும் ரூபா 2,105,840 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன எக்கட்டணமும் இன்றி பயன்படுத்துவதற்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(ii) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்பாடுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) அதிகாரசபைக்குரிய மீன் உற்பத்தி செயற்திட்டம், மீன் தயாரித்தல் செயற்திட்டம், சின்னப்பாடுவ உயிரின உற்பத்திக்கூடம், முந்தல் அவதானிப்பு நிலையம் மற்றும் தலைமை அலுவலக வளவில் காணப்பட்ட ரூபா 16,077,000 பெறுமதியான 05 கட்டிடங்களும், ரூபா 11,829,373 பெறுமதியான 24 இயந்திர உபகரணங்களும் 05 வருடங்களுக்கும் - 08 வருடங்களுக்கும் இடையிலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**b)** ரூபா 9,916,336 பெறுமதியான P.C.R. இரசாயனகூடம் இரண்டு வருட காலமாக எவ்வித ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

**5.2 வணிக முற்பணக் கணக்கு**

**5.2.1 வடமேல் பயிற்சி நிறுவனம் - கணக்கு இல. 26002**

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) நேரடியாக வங்கிக்குக் கிடைத்த ரூபா 173,907 தொகையான காசோலை காசேட்டில் இரு தடவை பதியப்பட்டமையால் பாடநெறி வருமானம் ரூபா 173,907 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டு இலாபமும் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

b) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பாடநெறி வருமானம் ரூபா 1,348,475 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பதிவேடுகளின் படி 2013 ஆண்டிற்குரிய 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,710,534 தொகை கிடைத்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,362,059 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ii) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணி | 7,000,000 | |
| கட்டிடங்கள் | 92,400,000 | (i) நிலையான சொத்துப் பதிவேடு |
| மோட்டார் வாகனங்கள் | 3,800,000 | (ii) விபரமான அட்டவணை |
| தளபாடம் | 1,237,901 | (iii) மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| ஏனைய இயந்திர உபகரணம் | 1,205,798 | (iv) உரித்தை உறுதிப்படுத்தும் கடிதம் |
| அலுவலக மற்றும் பயிற்சி உபகரணங்கள் | 8,414,976 | |
| அட்டுறு செலவினம் | 733,488 | காலப்பகுப்பாய்வு மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| கிடைக்கவேண்டிய வருமானம் | 1,348,475 | |

**(iii) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| மாகாண நிதி விதி | |
| a) மா.நி.வி. 375.1 | வணிக முற்பணக் கணக்குகளில் தேறிய நட்டத்தைப் பதிவழிப்பதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| b) மா.நி.வி. 546 | காசு, காசோலை, பொருட்கள் போன்றவற்றை கையேற்றல் அல்லது பொறுப்பாக இருக்கின்ற, காசோலையில் கையொப்பமிடுகின்ற மற்றும் உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுகின்ற |

உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெறவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத்தேய்வை சீராக்குவதற்கு முன் இலாபம் ரூபா 206,790 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பெறுமானத்தேய்வைச் சீராக்குவதற்கு முன் இலாபம் ரூபா 1,175,740 ஆனமையால் ரூபா 968,950 தொகை இலாபத்தில் குறைவொன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருடாந்த பெறுமானத்தேய்வு முறையே ரூபா 2,847,092 மற்றும் ரூபா 2,612,736 தொகைகளைச் சீராக்கியதன் பின் ரூபா 2,640,302 தொகையும் ரூபா 1,436,996 தொகையுமான நட்டம் ஏற்பட்டிருந்தது. அதன் படி முன்னைய ஆண்டின் நிதி விளைவை ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,203,306 குவைறைக் காணமுடிந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் ரூபா 114,058,675 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண மதிப்பீட்டாளரினால் சொத்துக்கள் ரூபா 76,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 38 மில்லியன் தொகையான சொத்துக்கள் குறை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் படி மதிப்பீட்டு அறிக்கை விளைவற்ற செயற்பாட்டிற்கு உள்ளாகியிருந்தது.

**5.2.2 முயற்சியாண்மை அபிவிருத்தி சேவை ஒன்றிணைந்த இனவிருத்தி பண்ணை மாவத்தகம - கணக்கு இல. 25002**

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

a) மாகாண குறித்தொதுக்க மானியத்தின் கீழ் அமைச்சின் செலவினத் தலைப்பில் நாற்றுமேடை நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 154,225 கூட்டுத்தொகையான 04 செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

b) பண்ணையின் நிலத்தின் நடுவில் வடிந்தோடும் வாய்க்கால் வழியில் அமைந்துள்ள அணைக்கட்டில் குவிந்துள்ள

மண்ணை அகற்றி இருபக்க சுவரையும் அமைப்பதற்காக ரூபா 492,744 தொகையான செலவினம் செய்யப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டின் அல்லது மீளாய்வாண்டின் கணக்குகளில் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ii) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **வடமேல் மாகாண நிதி விதிக் கோவை** | |
| i. மா.நி.வி. 375(1) | முற்பணக் கணக்குகளில் தேறிய நட்டமொன்று எதிர்பார்க்கப்படுமாயின் அந்த தேறிய நட்டத்தைப் பதிவழிப்பதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. மா.நி.வி. 377(1) | மூலதனச் சொத்துக்களின் பெறுமதி குறைவடைவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 604,478 தொகை பெறுமானத் தேய்வுக்காக ஒதுக்கப்பட்டிருந்தும் அத்தொகை பொது வைப்புக் கணக்கின் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தில் செலவு வைப்பதற்காக மாகாணத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் நட்டம் ரூபா 850,506 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 68,448 ஆனமையால் ரூபா 918,954 வீழ்ச்சி காணப்பட்டது. இந்த வீழ்ச்சி தொடர்பில் ஆண்டின் மொத்த புரள்வு ரூபா 433,912 இனால் குறைவடைந்தமை நேர் மூலப்பொருள் செலவினம் ரூபா 569,260 இனால் அதிகரித்தமை மற்றும் சுழற்சிச் செலவினம் ரூபா 69,531 இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**நிதியத்தின் குறைப் பயன்பாடு**

அமைச்சின் மாகாண குறித்தொதுக்க நிதியேற்பாட்டின் கீழ் கால்நடை அபிவிருத்தி பயிற்சி இனவிருத்தி பிரிவை தாபிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 535,140 தொகையான நிதி ஏற்பாட்டிலிருந்து உரிய செயற்பாட்டிற்குப் புறம்பாக தோட்ட முகாமையாளரின் உத்தியோகபூர்வ வீட்டிற்காக மின்சாரத்தைப் பெறுவதற்கும் புல்வெட்டும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கும் ரூபா 329,402 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**5.2.3 நாற்றுமேடை செயற்பாடுகளை செயற்படுத்தலும் விதை நெல் வழங்குதலும் - கணக்கு இல. 25102**

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

(i) முற்பணக் கணக்கு எல்லையினை விஞ்சுதல்

கணக்கீடு செயற்பாடுகளில் ஆகக்கூடிய எல்லையை விஞ்சியவைகள் ரூபா 1,023,963 ஆகும்.

(ii) கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது ஏனைய செலவினத் தலைப்புக்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,344,714 தொகையான 07 சொத்து விடயங்கள் பண்ணைக்கு கையளிக்கப்பட்ட போதிலும் சொத்து கையேற்றல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

வாரியபொல பண்ணை பயிர் நாற்றுக் கணக்குகளின் படியும் இருப்புப் பதிவேட்டின் படியும் ரூபா 1,093,435 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

(iv) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் வெளிப்படுத்தப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| மாகாண நிதி விதிக் கோவை | |
| i. மா.நி.வி. 375(1) | நிதியாண்டில் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் தேறிய நட்டமொன்று எதிர்பார்க்கப்படுமாயின் அந்த தேறிய நட்டத்தைப் பதிவழிப்பதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. மா.நி.வி. 377(1) | மூலதனச் சொத்துக்களின் பெறுமதி குறைவடைவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,884,490 தொகை பெறுமானத் தேய்வுக்காக ஒதுக்கப்பட்டிருந்தும் அத்தொகை பொது வைப்புக் கணக்கின் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தில் செலவு வைப்பதற்காக மாகாணத் திறைசேரிக்கு காசாக அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் நட்டம் ரூபா 7,282,846 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 4,618,721 ஆனமையால் நட்டத்தில் ரூபா 2,664,125 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. இந்த அதிகரிப்பு தொடர்பில் ஆண்டின் புரள்வு ரூபா 5,001,596 ஆல் குறைவடைந்தமையும் நிருவாக மற்றும் பொதுச் செயற்பாட்டுக் கிரயம் ரூபா 141,130 ஆல் அதிகரித்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

கத்தரி, சிறகவரை, உழுந்து மற்றும் நிலக்கடலை விதை 471 கி.கிராம் உற்பத்தி முடிவடைந்து 4 இற்கும் 5 மாதங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**5.2.4 வாரியபொல இழைய கிளைஒட்டுதல் ஆய்வு கூடம் - கணக்கு இல. 25003**

**(அ) நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து கையளிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் 82 பொருட்பதிவேட்டு விடயங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(b) ஐந்தொகையிலும் உற்பத்தி வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கிலும் காண்பிக்கப்பட்ட ரூபா 4,502,574 கூட்டுத்தொகையான 7 மீதி விடயங்களுக்காக பிரதான பேரேட்டில் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியசின் நிதிப் பிரமாணக் கோவையின் 177 இன் படி 12 சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தொகை ரூபா 484,585 பெறுமதியான பணத்தை வங்கியிலிடும் போது தாமதம் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நிதி மீளாய்வு**

**நிதி விளைவுகள்**

2013 யூன் 01 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் செயற்பாட்டு இலாபம் ரூபா 125,757 ஆகும்.

**6. செயற்பாட்டு மீளாய்வு**

**6.1 செயலாற்றல்**

**(அ) அரசாங்க மானியம்**

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக கிடைத்திருந்த நிதியேற்பாடுகள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | மூலம் | நிதியேற்பாடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | பிரமாண அடிப்படையிலான மானியம் | 96,880,000 | 83,579,689 | 13,300,311 |
| (ii) | மாகாணம் குறித்த அபிவிருத்தி மானியம் | 1,112,996,500 | 759,741,130 | 353,255,370 |
| (iii) | பொது மானியம் | 255,991,700 | 241,314,598 | 14,677,102 |
| (iv) | ஏனைய மானியங்கள் | 704,957,017 | 310,191,145 | 394,765,872 |
| | | 2,170,825,217 | 1,394,826,562 | 775,998,655 |

**(ஆ) மாகாண அபிவிருத்தித் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் புதிய வேலைகள் மற்றும் தொடர் வேலைகளுக்காக ரூபா 878,234,241 பெறுமதியான 1,397 வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த வேலைத் திட்டங்களின் பௌதீக செயலாற்றல் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| | | புதிய வேலை | தொடர் வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 1,147 | 166 | 1,313 |
| (ii) | 50 சதவீதத்திற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 37 | 02 | 39 |
| (iii) | 50 சதவீதத்திற்கு குறைவாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 23 | - | 23 |
| (iv) | ஆரம்பிக்கப்படாத | 19 | 03 | 22 |
| | மொத்தம் | 1,226 | 171 | 1,397 |

(இ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் வன்னிகம ஒன்றிணைந்த பண்ணை அபிவிருத்தி பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியில் 74 ஏக்கரில் புல் பயிரிட முடியுமான போதிலும் 05 ஏக்கரில் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தது. இதனைப் பன்னையின் பசுக்களுக்கு போதியளவான புற்கள் இல்லாமையால் பால் உற்பத்தி குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) சிறு கைத்தொழில் திணைக்களத்தின் ஐந்து வருட திட்டத்தின் படி 2013 ஆம் ஆண்டின் போது பயிற்சிக்காக 772 பயிலுனர்களைச் சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 313 பேர் மாத்திரம் சேர்க்க்பபட்டிருந்ததுடன் அதில் 20 பேர்களுக்கு பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 114,416,000 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தும் பயிலுனர்களின் பயிற்சிச் செலவினம் ரூபா 365,546 ஆக இருந்ததுடன்

வெற்றிகரமாக பயிற்சியை பூர்த்தி செய்த எண்ணிக்கையுடன் ஒப்பிட்ட போது அது ரூபா 5,720,800 ஆன உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. இலக்கிடப்பட்ட அளவில் பயிலுனர்கள் சேர்கப்படாமையும் பயிற்சி முறையானதாக மேற்கொள்ளப்படாமையும், சேர்க்கப்பட்ட மாணவர்களை தக்கவைத்துக் கொள்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடைவதற்காக நிறுவனத்திற்கு அடைய முடியாதிருந்தது.

(உ) ரூபா 13,300,000 தொகையான கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் தித்தவெல்ல குள புறச்செயற்பாட்டு சிறு நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் 10 செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையில் மாகாண கமநல அமைச்சு ரூபா 16,162,641 தொகையை செலவிட்டிருந்த போதிலும், 2013 ஆம் அண்டின் போது நிகழ்ச்சித்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் வினைத்திறனானதாகவும் செயற்திறனானதாகவும் நிறைவேற்றப்படாதிருந்தமையும் இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வனாத்தவில்லு பிரதேச செயலகப் பிரிவில் களுதொடை கிராமத்தில் அமைந்துள்ள 20.52 ஹெக்டேயர் காணி 1994 ஆம் ஆண்டின் போது வணிக நடவடிக்கைகளுக்கு கம்பனியொன்றுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 ஒக்தோபர் மாதத்தின் போது அக்கம்பனி கலைக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட காணி மீள அரசாங்கத்தால் கையேற்கப்படாமல் 2014 ஆம் ஆண்டின் போது உரிய கம்பனிக்கு குத்தகை செலுத்துமாறு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சட்டரீதியான அடிப்படையொன்று காணப்படவில்லை.

(ஆ) நீண்டகால குத்தகை முறைமையின் கீழ் காணியைப் பெற்றுக்கொள்வதற்காக புத்தளம் பிரதேச செயலகத்திற்கு கிடைத்த 184 விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான 116 ஏக்கர் 56 பேர்ச் காணி 12 நபர்களினால் 2013 ஆம் ஆண்டு முதல் அனுமதியற்ற முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வென்னப்புவ பிரதேச செயலகப் பிரிவில் அரசாங்கத்திற்குரிய நூரானி கைத்தொழில்பேட்டையில் 05 ஏக்கர் காணி தனியார் இரும்பு கைத்தொழிற் சாலைக்கு 1999 ஆம் ஆண்டு முதல் கையளிக்கப்பட்டிருந்தது. காணியில் 2½ ஏக்கர் 2009 ஆம் ஆண்டின் போது 4/10/15695 ஆம் இலக்க நீண்ட கால குத்தகையின் கீழ் அக்கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், எஞ்சிய 2½ ஏக்கரும் 1999 ஆம் ஆண்டு முதல் 2009 வரை அனுமதியற்றவர்களால்

பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த கைத்தொழில்பேட்டையில் மேலும் 0.158 ஹெக்டேயர் காணி 1999 ஆம் ஆண்டு முதல் பெண்ணொருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படாதிருந்தும் அக்காணியை உடன்படிக்கையின் படி மீளக் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மஹவெவ பிரதேச செயலகப் பிரிவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 12 காணிக் கூறுகள் 02 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரை பல்வேறு நபர்களினால் அனுமதியற்ற வகையில் உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், அவற்றை முறையாக நீண்ட காலரீதியில் குத்தகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) புத்தளம் கல்வி வலயத்திலிருந்து ஏனைய மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றலாகிச் சென்ற 77 ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் ரூபா 1,836,913 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாத கடன் ரூபா 1,836,913 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாத கடன் ரூபா 1,563,684 ஆகும்.

(எ) 2013 ஆம் ஆண்டின் போது வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு சிறுவர் துஷ்பிரயோகம், நிதி மோசடி மற்றும் ஏனைய ஒழுக்காற்று விரோதச் செயற்பாடுகளாக மொத்தமாக 262 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அதில் வலயக் கல்வி அலுவலகத்திற்கு 199 முறைப்பாடுகள் அனுப்பப்பட்டிருந்தும் 70 முறைப்பாடுகளுக்காக மாத்திரம் பதிலளிக்கப்பட்டிருந்தது. 129 முறைப்பாடுகள் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன், மாகாண கல்வி அலுவலகத்தால் 30 முறைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 10 முறைப்பாடுகள் மேலும் விசாரணை மட்டத்தில் காணப்பட்டன.

2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை கிரிவுல்ல வலயக் கல்வி அலுவலகத்திற்கு 176 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அதில் 41 இற்கு புலனாய்வு முடிவடைந்திருக்கவில்லை.

## 6.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருணாகலை மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்கள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மாகாண முதலீட்டு நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 751,611 கூட்டுப்பெறுமதியான 188 வகையான பொருள் வகைகளும், புத்தளம் மாவட்டத்தில் தங்கொட்டுவ பிரதேச செயலகத்தால் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட 282 பிளாஸ்டிக் கதிரைகளும், 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 25 வகைக்குரிய 194 பொருட்களும் 2014 பெப்ரவரி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 02 வைத்தியசாலைகள், 02 சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச மருத்துவ வழங்கல் பிரிவில் ரூபா 3,016,124 பெறுமதியான மருந்துகள் மற்றும் 162 வகையான சந்திரசிகிச்சை வைத்திய உபகரணங்களில் 559,177 அலகுகளின் இருப்பும், பெறுமதி கணிப்பிட முடியாத மேலும் மருந்துகள் மற்றும் 84 வகையான சத்திரசிகிச்சை வைத்திய உபகரணங்களில் 874,344 அலகுகளின் இருப்பும் காலாவதியாகிருந்தமை, தெரிவு மாதிரி பழுதடைந்தமை, நிறம் மற்றும் வாசனை மாற்றமடைந்தமையால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 6.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 04 ஆந் திகதிய அதிமேதகு சனாதிபதி அவர்களின் சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் அதனுடன் திருத்தப்பட்ட 2006 மார்ச் 18 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் 2013 ஆம் ஆண்டின் போது மாகாண சபையின் தலைவருக்கும், எதிர்கட்சித் தலைவருக்கும், சமூக நலன் மாகாண அமைச்சருக்கும், அவரது பிரத்தியோக பதவியணியினர்களுக்கும் ரூபா 281,800 தொகையான இணைந்த படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

மேற்கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் மாகாண சபையின் பிரதித் தலைவருக்கும் ஆளும்கட்சி அமைப்பாளருக்கும் தொலைபேசி படி மற்றும் எரிபொருள் படியாக 2013 ஆம் ஆண்டில் 09 மாதங்களுக்காக ரூபா 870,291 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2013 செப்தெம்பர் 26 ஆந் திகதிய பாராளுமன்ற பொதுச் செயலாளரின் கடிதத்திற்கு இணங்காத வகையில் மாகாண சபையின் தலைவருக்கும், எதிர்கட்சித் தலைவருக்கும், 04 மாகாண அமைச்சர்களுக்கும் மற்றும் 46 மாகாணசபை உறுப்பினர்களுக்கும் 2013 ஆம் ஆண்டின் போது தொலைபேசிப் படியாக ரூபா 4,870,671 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சமூக நலன்புரி அமைச்சரின் நிரந்தர பதவியணியினரில் 36 தையல் ஆலோசனையாளர்கள் இருக்கும் போது முறையான அங்கீகாரமின்றி தையல் பாடநெறிக்காக ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 500 படி 04 வளவாளர்களுக்கு 11 சந்தர்ப்பங்களின் போது ஈடுபடுத்தல் படியாக ரூபா 192,000 தொகையும் உபசரிப்புப் படியாக ரூபா 15,765 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

## 6.6 வெளிப்படையான மோசடிகள்

குருனாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2013 இன் முதல் 04 மாதங்களுக்குரிய 10 பிரயாணச் செலவின மீளளிப்பு உறுதிச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை விட கூடிய பெறுமதி காண்பிக்கப்பட்டு ரூபா 174,091 தொகை மோசடியாக பெறப்பட்டிருந்தது.

## 6.7 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்பாடுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| நிறுவனத்தின் பெயர் | சொத்துக்களின் எண்ணிக்கை | பெறுமதி | செயற்பாடற்றிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா | |
| குருணாகலை ஆயுர்வேத வைத்தியசாலை | பங்சகர்ம மருந்தேற்றல் மற்றும் யோகா நிலையம் | 3,859,706 | 2012 முதல் |
| அம்பன்பொல வைத்தியசாலை | பங்சகர்ம கட்டில் | - | 2011 முதல் |
| குளியாப்பிட்டி தள வைத்தியசாலை | 4 சத்திரசிகிச்சைக் கூடங்களுடன் கட்டிடம் | 411,000,000 | 2012 முதல் |
| குளியாப்பிட்டி தள வைத்தியசாலை | 4 மாடி மருந்துக் களஞ்சியம் | - | 2010 முதல் |
| பொல்பித்திகம சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் | 68 பொருள் அலகுகள் | - | 06 முதல் 20 வருடங்கள் |
| பொல்பித்திகம மாவட்ட வைத்தியசாலை | ஆரம்ப சிகிச்சைப் பிரிவு | 1,059,620 | 2012 முதல் |
| பொல்பித்திகம மாவட்ட வைத்தியசாலை | வாட்டுகள் மற்றும் சிகிச்சை நிலையங்களிலிருந்து அகற்றப்பட்ட 270 வகையான பொருட்கள் | - | 2 முதல் 15 வருடங்கள் |
| பொல்பித்திகம மாவட்ட வைத்தியசாலை | இரண்டு மாடி சிறுவர் வாட்டுக் கட்டிடம் | 6,612,023 | 2009 முதல் |
| மாரவிலை தள வைத்தியசாலை | சத்திரசிகிச்சைக்கூட விளக்குகள் | 1,300,000 | 2011 முதல் |
| அலவ்வ பிரதேச செயலகம் | அரசாங்கக் காணியில் 02 கட்டிடங்கள் | - | 1996 முதல் |
| புத்தளம் தள வைத்தியசாலை | ஸ்பெக்ரோபொட்டோ மீற்றர் | 630,000 | 2012 முதல் |
| | 07 மருத்துவ உபகரணங்கள் | - | 2011 முதல் |

## 6.8 இணங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தளம் பிரதேச செயலகப் பிரிவின் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 101 காணிக்கூறுகள் அனுமதியற்றவர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே மேலும் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 600 நபர்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அரசாங்கத்தின் காணியை அனுமதியற்ற முறையில் பயன்படுத்தியிருந்தனர்.

(ஆ) சிலாபம் மாகாண நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் மேற்பார்வை செய்யப்பட்ட சிலாபம் பசார் வீதி காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலைக்கு ரூபா 407,592 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 6.9 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தால் வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ரூபா 10,446,172 தொகை செலவில் குளியாப்பிட்டி சிறுவர்களைத் தங்க வைக்கும் விடுதியின் இருமாடிக் கட்டிடத்தை நிர்மாணித்து பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கட்டிடத்தின் அலுமினிய யன்னல். இரும்பு கிறில்களைப் பொருத்துதல் மற்றும் சீமெந்துப் பூச்சுக்களை இட்டு வெள்ளையிடுவதற்காக மதிப்பீட்டுக் கிரயத்தை விட ரூபா 63,610 தொகையான மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி 05 நிற தண்ணீர் பேசன்கள் பொருத்தப்பட வேண்டிய போதிலும் நிறமற்றவைகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அவைகளுக்கும் நிற தண்ணீர் பேசன்களின் விலை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேல் மாடியில் பிரதான மண்டபத்தில் சீமெந்து இடப்பட்டு வெள்ளை பூசப்பட்ட 70.98 சதுர மீற்றர் பகுதி வெடித்து குழிகள் விழுந்தமையால் ரூபா 23,423 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iv) இரண்டு வகையான பழுதுகளுடன் 04 கதவுகள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு கதவு நிரந்தரமாக மூடப்பட்டிருந்தமையின் காரணமாக ரூபா 30,504 தொகையான செலவினமொன்றைச் செய்ய வேண்டியேற்பட்டிருந்தது.

(v) கட்டிடத்தின் கீழ் மற்றும் மேல் மாடியில் உள்ளேயும் வெளியேயும் சுவர் 09 இடங்களில் வெடித்திருந்ததுடன் கழிவு நீர் சுவர் முழுவதும் வடிந்தமையால் சுவர் அழிவுக்குள்ளாகியமையும் மழை நாட்களில் கட்டிடத்தின் கூரையிலிருந்து நீர் கீழே வடிந்து கொண்டிருந்தது.

(vi) நீர் வழங்கும் தாங்கிகளுக்குச் செல்வதற்கான (போவதற்கு) வழியொன்று அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) கீழ் மற்றும் மேல் மாடிகளில் மலசல கூடம் மற்றும் குளியலறைகளில் கழிவு நீர் வழிந்தோடும் வழிகள் நெருக்கடிக்குள்ளாகியமையினால் குடியிருப்பாளர்கள் வசதியீனங்களுக்கு உட்பட்டிருந்தனர்.

(ஆ) பொறியியல் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் குருணாகலை ஆயுர்வேத வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவின் விறாந்தையை பழுதுபார்க்கும் போது மதிப்பீட்டில் காணப்படுகின்ற ரூபா 480,137 பெறுமதியான 09 வேலை விடயங்கள் மற்றும் ரூபா 732,409 பெறுமதியான 20 வேலை விடயங்கள் கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக ரூபா 337,384 பெறுமதியான 16 வேலை விடயங்கள் மேலதிகமாக நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், நிருவாக உத்தியோகத்தர் அறையிலும், வைத்தியர்களின் ஓய்வறையிலும், வாட்டில் எழுதுவினைஞரின் அறையிலும் மற்றும் பிரதான தாதி உத்தியோகத்தரின் அறையிலும் டைல் வெடித்து நிலம் வெற்றிடமாக இருந்தமை பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) பொறியியல் திணைக்கள மேற்பார்வையின் கீழ் குருணாகலைப் பரிசுத்த கன்னியர் மகளிர் வித்தியாலயத்தில் 60’x43’ அளவான மூன்றுமாடி வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் II ஆம் கட்டம் ரூபா 4,622,564 தொகையில் நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட போதிலும் அதற்காக ரூபா 440,725 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ஒரு வகுப்பறையில் இரண்டு யன்னல்கள் மூடுவதற்கு முடியாதிருந்ததுடன் சில வகுப்பறைகளின் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

(ஈ) குருணாகலை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு ரூபா 1,267,833 தொகை ஒதுக்கப்பட்ட 11 செயற்திட்டங்களினது ரூபா 545,279 பெறுமதியான 03 வேலைகள் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதோகம குளத்தின் புனரமைப்பிற்கு ரூபா 245,233 தொகையும், ஹங்வத்த அணை நிர்மாணத்திற்கு ரூபா 196,189 தொகையுமாக ரூபா 441,422 தொகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பொறியியல் திணைக்களம் அவ் வேலைகளை நிறைவேற்றுவதைக் கைவிட்டிருந்தது.

**6.10 தாமதமான செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்காக ‘‘மும் மொழி இலங்கை நிகழ்ச்சித்திட்டம்’’ அமுல்படுத்துவதற்கு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரால் ரூபா 1,000,000 தொகை பிரதம செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 28 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 07 மதிப்பீடுகளின் மூலம் ரூபா 58,495,655 தொகை செலவிடப்பட்டு பொறியியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் ‘‘வயம்ப கொவிகெதர’’ நிர்மாணிக்கப்பட்ட போதிலும், இக் கட்டிடம் இது வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வடமேல் பொறியியல் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட குருணாகலை மலியதேவ மாதிரி மகா வித்தியாலயத்தில் 90’x25’ இரண்டு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்வதற்கு முன் இன்னுமொரு கட்டிடத்திற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 02 கட்டிடங்களினதும் நிர்மாணம் 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**6.11 முறையான பிரகாரம் கையேற்கப்படாத காணிகள்/ஆதனங்களில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்**

ஆயுர்வேத திணைக்களத்தின் 08 ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் 22 மத்திய மருந்தகங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து திணைக்களத்திற்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

**6.12 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட வளங்கள் / வெளி நபர்களுக்குரிய வளங்கள்**

2005 ஆகஸ்ட் 27 ஆந் திகதி மாஸ்பொத்த பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்ட கனேகொடை ஆரம்பப் பாடசாலையின் காணியும் கட்டிடமும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் செயற்படுகின்ற கடதாசி மீள் சுழற்சி கைத்தொழிலுக்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனங்களை உரிய நிறுவனத்திற்குக் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.13 பதவியணியினர் நிருவாகம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வலய அலுவலகங்களில் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 1,441 | 1,285 | 156 | - |
| மூன்றாம் நிலை | 539 | 395 | 144 | - |
| இரண்டாம் நிலை | 9,542 | 7,819 | 1,723 | - |
| ஆரம்ப நிலை | 4,427 | 3,894 | 533 | - |
| மொத்தம் | 15,949 | 13,393 | 2,556 | - |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர் (வலய அலுவலகங்கள் தவிர)

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர் | 1,461 | 1,220 | 241 | - |
| ஆசிரியர்கள் | 23,292 | 23,720 | - | 428 |
| சிற்றூழியர் | 1,908 | 1,805 | 103 | - |
| ஏனையவை | 614 | 635 | - | 21 |
| அமைய, தற்காலிகம் | - | - | - | - |
| மொத்தம் | 27,275 | 27,380 | 344 | 449 |

(இ) அமைச்சரவை பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பிரத்தியேக செயலாளர் | 06 | 06 | - | - |
| இணைப்புச் செயலாளர் | 08 | 07 | 01 | - |
| ஊடக செயலாளர் | 06 | 04 | 02 | - |
| பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் | 06 | 06 | - | - |
| தனிப்பட்ட உதவியாளர் | 06 | 06 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 18 | 13 | 05 | - |
| அலுவலக உதவியாளர் | 08 | 09 | - | 01 |
| ஏனையவை(சாரதி) | 24 | 205 | - | 181 |
| மொத்தம் | 82 | 256 | 08 | 182 |

(ஈ) உள்ளூராட்சி பதவியணியினர் (மாகாண சபை)

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 28 | 22 | 06 | - |
| மூன்றாம் நிலை | 48 | 22 | 26 | - |
| இரண்டாம் நிலை | 970 | 689 | 281 | - |
| ஆரம்ப நிலை | 2,489 | 2,860 | - | 371 |
| மொத்தம் | 3,535 | 3,593 | 313 | 371 |

### 6.13.1 மாகாண சபை கல்வி மற்றும் சுகாதாரம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களில் பதவியணியினர் தொடர்பான அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைச் செயலாளர் பதவிக்காக இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் வடமேல் மாகாண சபையின் மூன்று நகர சபைகளுக்கும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பின் உத்தியோகத்தர்கள் அப்பதவிகளில் வேலைகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பிரதேச சபை செயலாளர் பதவிக்காக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய போதிலும் மாகாணத்திற்குள் அமைந்துள்ள 15 பிரதேச சபைகளில் 09 உள்ளூராட்சி உத்தியோகத்தர்களும், இரண்டு நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களும் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் I மற்றும் II ஆம் வகுப்புக்களின் 04 உத்தியோகத்தர்களும் பதிற்கடமை அடிப்படையில் ஈடுபட்டிருந்தனர்.

(இ) மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தில் 33 உள்ளூராட்சி நிறுவனங்களில் 317 பதவிகளில் 152 இற்காக தகைமையற்றவர்கள் நியமிக்கப்படாமையினால் அப்பதவிகளை உருவாக்கி உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்பார்த்த பொது மக்கள் சேவைகள் திருப்பதிகரமானதாக நிறைவேற்றப்படும் என்பதை எதிர்பார்க்க முடியாதிருந்தது.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் 803 பட்டதாரி பயிலுனர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் படி உரிய நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் ஈடுபடுத்தப்பட்ட எண்ணிக்கைகளை ஒப்பீடு செய்த போது உள்ளூராட்சித் திணைக்களத்தில் 08 பேர்களில் மிகையும், குருணாகலை மாவட்டத்தில் 09 பேர்களின் மிகையும், புத்தளம் மாவட்டத்தில் 32 பேர்களின் பற்றாக்குறையும் காணப்பட்டன. அவ்வாறே உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளுடன் ஒப்பீடு செய்த போது குருணாகலை மாவட்டத்தில் 02 மிகையும்,

புத்தளம் மாவடட்த்தில் 132 வெற்றிடங்களும் காணப்பட்டன.

(உ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு 104 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன.

**6.13.2 கல்வி தொடர்பான ஆசிரியர் மிகை மற்றும் பற்றாக்குறை, இணைத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் புத்தளம் கல்வி வலயத்தில் 192 பாடசாலைகளில் 88 பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்காக பதில்கடமை அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 1076 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) புத்தளம் கல்வி வலயத்தில் சிங்களம் மற்றும் தமிழ் பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டின் போது பதிலாளின்றி மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்களின் காரணமாக 307 வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.

(இ) சிலாபம் கல்வி வலயத்தில் தேசிய பாடசாலையை உள்ளடக்கிய 08 பாடசாலைகளில் 12 அதிபர் தரங்களிலுள்ளோர் ஆசிரியர் சேவையின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் ஆராச்சிக்கட்டுவ, சிலாபம், நாத்தாண்டிய, வென்னப்புவை பிரிவுகளில் 37 பாடசாலைகளில் 37 ஆசிரியர்கள் 2013 ஆம் ஆண்டின் போது அதிபர் பதவிகளில் பதில்கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைப் பதவியணியினரில் 344 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இரண்டு பதவியினருக்காகப் சேர்க்கப்பட்ட 449 உத்தியோகத்தர்களில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நிறுவனம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.13.3 சுகாதாரப் பிரிவு தொடர்பாக ஒவ்வொரு சேவைகளிலும் ஊழியர் மிகை அல்லது பற்றாக்குறை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் சுகாதாரத் திணைக்களம் 1,753 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆயுர்வேதத் திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதியில் 158 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

(இ) ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் மத்திய மருந்தகங்களுக்காக 45 மருந்துக் கலவையாளர் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சகல பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அதற்காக ஏனைய பதவிகளின் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) சுகாதாரத் திணைக்களத்திற்கு சேர்க்கப்பட்ட 278 மிகையான ஊழியர்கள் தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு குருணாகலை மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் பதவியணியினர்களில் 33 பதவிகளுக்குரிய 1,343 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு முறையே 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாகவும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(ஊ) 2013 ஆம் ஆண்டின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பதவியணியினர் அறிக்கையின்படி மாரவில மற்றும் புத்தளம் தள வைத்தியசாலைகளில் முறையே 22 வைத்திய உத்தியோகத்தர்கள் மிகையாக 16 பேர்களின் வெற்றிடமும் காணப்பட்டன. மிகையான பதவியணியினருக்காக மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் தொடர்ச்சியாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 6.14 வங்கி இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்வித் திணைக்களத்தின் 18 வங்கிக் கணக்குகளில் 15 இற்கு மீளாய்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த காசோலையின் பெறுமதி ரூபா 1,915,164 ஆக இருந்ததுடன் மாகாண நிதி விதி 283 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கல்வித் திணைக்களத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் 08 வங்கிக் கணக்குகளில் ரூபா 235,483 தொகையான இனங்காணப்படாத வரவு மற்றும் 06 வங்கிக் கணக்குகளில் ரூபா 916,153 தொகையான இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் காணப்பட்டதுடன் அவற்றை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மாகாண இறைவரித் திணைக்களம், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் தொடர்பான அமைச்சு, ஆளுநர் அலுவலகம் மற்றும் சிறு கைத்தொழில் திணைக்களம் என்பவற்றிற்கு 2013 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக மாகாண சபையின் ஒவ்வொரு நிறுவனங்களிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டிற்காக பின்வரும் நிறுவனங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

சுகாதாரம், சுதேச வைத்தியம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, மாகாண இறைவரித் திணைக்களம், மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம், மாகாண கல்வித் திணைக்களம், வடமேல் ஜனகலா மன்றம், கூட்டுறவு அபிவிருத்தி மன்றம், கைத்தொழில் சேவைப் பணியகம், கமநல, கடற்றொழில் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சு, மாகாண கமநல திணைக்களம், ஆளுநர் அலுவலகம்

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக மாகாண சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் வருமான சேகரித்தல்
(ஆ) சொத்துக்கள் மற்றும் மனிதவளங்கள் முகாமைத்துவம்
(இ) ஒப்பந்தங்களை நிறைவேற்றலும் கொடுப்பனவும்
(ஈ) செயற்திட்டங்களை அமுலாக்குதல்
(உ) நியதிச் சட்டங்களின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவகங்களின் நிதி மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு
(ஊ) வாகனப் பயன்பாடு